**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10012025-9267

Volume: 10

Issue: 1

Month: July

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 24.04.2025

Accepted: 25.06.2025

Published: 01.07.2025

Citation:
Maragatham, B, and P Valarmathi. 2025. "Rajarajan's Moral Principles Based on Udaiyar Novel." *Shanlax International Journal of Tamil Research, 10*(1), 16–29.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i1.9267

*Corresponding Author:
maragathamsvga@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Rajarajan's Moral Principles based on Udaiyar Novel

**B. Maragatham**
*(BDU2210632779773), Ph.D. Research Scholar of Tamil, Government Arts College*
*Affiliated to Bharathidasan University, Trichy, Tamil Nadu, India*
*http://orcid.org/0009-0007-1159-3816*

**P. Valarmathi**
*Assistant Professor of Tamil, Government Arts College*
*Affiliated to Bharathidasan University, Trichy, Tamil Nadu, India*
*http://orcid.org/0009-0007-8713-1861*

**Abstract**

*According to the statement of the great poet Bharathi that there is nothing as sweet as the Tamil language, the 'Tamil language' is overflowing with literature. In all the literature from the Sangam period to modern literature, the way of life of man has been described. The norms that he should follow have also been mentioned. Among the three dynasties that ruled the south during that period, there is a lot of data about the Cholas. Rajaraja, who came from the lineage of Sibi Chakravarthy, who cut his flesh for a pigeon, and Manuneethi Chola, who gave justice to a cow, ruled without compromising on justice. He lived with religious tolerance from a young age. During the reign of Uncle, he traveled all over the Chola country and heard the grievances of the people firsthand. After assuming power, he understood the needs of the people and fulfilled them. He interacted with warriors on friendly terms. He respected foreign warriors. He avoided anger while talking to officials. He did good to all living beings living in the Chola country. He paid more attention to worship. This article examines the qualities of Rajaraja, the grace he showed to the people, the respect he had for his guru, and his hospitality.*

***Keywords:*** *Tamil Language, Mahakavi Bharathi, Rajaraja, Virtue, Emperor Sibi Chakravarthy, Religious Tolerance, Chola Rule, Guru, Officials, Character, Grace, Hospitality.*

**References**

1. Ilampooranaar, Tholkappiya Porulathigaaram, Saratha Publication, Chennai, First Edition May 2005.
2. Kannan S.N, Rajaraja Cholan, East Publication, First Edition December 2010
3. Kathiraiver Pillai N, Thamizh Mozhi Agaraathi, Saratha Publication Chennai, First Edition – 2003.
4. Kanimethaiyaar, Elaathi, Saiva Sithantha Noorpathippu Kazhagam, First Edition, November – 1939.
5. Sathasiva Pandarathar T. V, Pirkala Cholar Sarithiram, Second Edition, 2022.
6. Samas. Cholargal Indru, Dinamalar, First Edition May 2003.
7. Duraisaamipillar.S., "Puranaanooru" Moolamum Uraiyum, Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, First Edition 1951.
8. Balakumaran, Udaiyar Paagam – 1, Visa Publications, Chennai, First Edition, May 2002.

9. Balakumaran, Udaiyar Paagam – 3, Visa Publications, Chennai, First Edition, December 2004.
10. Balakumaran, Udaiyar Paagam – 5, Visa Publications, Chennai, First Edition, December 2005.
11. Balakumaran, Udaiyar Paagam – 6, Visa Publications, Chennai, First Edition, August 2006.
12. Mannar Mannan. R, Rajaraja Cholan, Payitru Publication, Chennai, First Edition, July – 2021.
13. Varadaraajan G, "Thirukkural" Urai Vilakkam, Pazhaniyappa Brothers Publication, First Edition January 1954.

# உடையார் புதினம் வழி அறியலாகும் இராஜராஜன் பின்பற்றிய அறக் கோட்பாடுகள்

*பா. மரகதம்*
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, அரசு கலைக் கல்லூரி
பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது, திருச்சி

*முனைவர் ப. வளர்மதி*
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, அரசு கலைக் கல்லூரி
பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது, திருச்சி

***ஆய்வுச் சுருக்கம்***

*அன்றையக் காலகட்டத்தில் தென்பகுதியை ஆண்டு வந்த மூவேந்தர்களில் சோழர்களைப் பற்றிய தரவுகள் அதிகம் உள்ளன. புறாவிற்காகத் தன் சதையை வெட்டிக் கொடுத்த சிபி சக்கரவர்த்தியும், பசுவிற்கு நியாயம் வழங்கிய மனுநீதிச் சோழனும் வாழ்ந்த பரம்பரையின் வழி வந்த இராஜராஜன் நீதி நெறி தவறாது ஆட்சி செய்தான். சிறு வயதில் இருந்து சமய பொறையுடன் வாழ்ந்தான். சித்தப்பாவின் ஆட்சிக் காலத்தில் சோழ நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து மக்களின் குறைகளை நேரில் கேட்டு அறிந்தான். போர் வீரர்களுடன் நட்பாகப் பழகினான். அதிகாரிகளுடன் உரையாடும் நேரத்தில் சினத்தைத் தவிர்த்தான். சோழ நாட்டில் வாழ்ந்த அனைத்து உயிர்களுக்கும் நன்மை செய்தான். வழிபாடுகளில் அதிக கவனம் செலுத்தினான். இராஜராஜனின் குணநலன்கள் மக்களிடம் காட்டிய அருள் குருவிடமும் இருந்த மரியாதை, விருந்தோம்பல் பண்பு போன்றவற்றை இக்கட்டுரை ஆராய்கிறது.*

***கருச்சொற்கள்:*** *தமிழ்மொழி, மகாகவி பாரதி, இராஜராஜன், அறம், சிபிச் சக்கரவர்த்தி, சமய பொறை, சோழர் ஆட்சி, குரு, அதிகாரிகள், குணநலன், அருள், விருந்தோம்பல், உடையார்.*

## முன்னுரை

தமிழர்களின் வாழ்க்கையில் இலக்கியம் பெரும் பங்கு வகிக்கின்றது. இலக்கியம் என்ற சொல்லுக்கு "இலக்கை இயம்புதல்" என்று பொருள் கொள்வர். பண்டையத் தமிழர்களின் அன்றாட வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளான காதல், வீரம், கொடை, சமயம், ஒழுக்கம், கலை மற்றும் பண்பாட்டுக் குறிப்புகள் அடங்கியப் பெட்டகமாகத் தமிழ் இலக்கியங்கள் விளங்குகின்றன. ஒரு மனிதன் வாழ்வை நன்முறையில் வாழ வேண்டும் என்று இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. சங்க காலத்தில் தோன்றிய நூல்கள் மக்களின் வாழ்வியலைப் பறை சாற்றுகின்றன. வறுமையிலும் நீதி தவறாத மக்கள், அவர்களின் பழக்க வழக்கம், தலைவன், தலைவியரது இல்லற வாழ்க்கை, அவர்களுக்குத் துணையாக நின்ற தோழி, பாங்கன், நற்றாய், செவிலி என்று பல வடிவங்களில் அன்று வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் மூவேந்தர்களின் ஆட்சிச் சிறப்பு கூறப் பட்டுள்ளது. பதினெட்டு நூல்களில் பதினோரு நூல்கள் அறம் சார்ந்தவை. அறம் என்பது மனிதர்கள் ஒரு குழுவாக அவர்களுக்குள் உருவாக்கிக் கொள்ளும் நெறிகள் ஆகும்.

அறம் என்ற சொல்லுக்கு ஒழுக்கம், தருமம், புண்ணியம், நோன்பு, தவம், சமயம், ஆசாரம் என்று பல பொருள்கள் உள்ளன. ஒழுக்கம் நிறைந்த வாழ்வை உயரிய வாழ்வாகத் தமிழ் இலக்கியங்கள் சுட்டுகின்றன.

"உடையார்" புதினத்தின் ஆசிரியர் பாலகுமாரன். இப்புதினம் ஆறு பாகங்களைக் கொண்டது. இதில் நூற்றி எழுபத்தி ஏழு அத்தியாயங்கள் உள்ளன. இரண்டாயிரத்து ஏழு நூறுப் பக்கங்களுக்கு மேல் உள்ளன. இது சோழர்களின் வாழ்வியலை விவரித்திடும் வரலாற்றுப் புதினம்.

புதினத்தில் பிற்காலச் சோழர் வரலாற்றைத் தோற்றுவித்த விஜயாலயச்சோழன், அவர் உருவாக்கிய விஜயாலயச் சோழீச்சுரம் கோவிலின் பழமை இடம் பெற்றுள்ளன. இராஜராஜனின் பெற்றோர், பாட்டி, சகோதரி, மனைவிகள், மகள்கள், மகன் என்று குடும்ப உறுப்பினர்கள் விவரிக்கப்பட்டுள்ளனர். இராஜராஜனின் வாழ்க்கை, அவரின் நிர்வாகத் திறன், குடவோலை முறை, சாவா மூவாப் பேராடு திட்டத்தின் வளர்ச்சி நிலை, போர்கள், தஞ்சைப் பெரிய கோவில் உருவான விதம் அதற்கு அளித்த கொடைகளின் விபரம் போன்ற பல்வேறு தரவுகள் கூறப்பட்டுள்ளன. சமயநெறியைத் தழைத்து ஓங்கச் செய்த சமய குரவர்கள் பற்றியும் அவர்கள் அருளிச் செய்த தேவாரத் திருவாசகங்கள் குறித்தும் கூறப்பட்டுள்ளன. இப்புதினம் சோழ நாட்டு மக்களின் வாழ்வியல், பண்பாடு, நம்பிக்கைகள், கலைகள், நாட்டின் வளம், நாட்டுப்பற்று போன்றவற்றைக் கூறுகின்றது.

## ஆய்வு அணுகுமுறை

இராஜராஜனின் குணநலன்கள், அவர் போரின்போது கடைபிடித்த அறம், குடும்பத்தின் மீது காட்டிய அறம், மக்களிடம் காட்டிய அன்பு, அறம், ஈகைப் பண்பு, சோழ நாட்டிற்குக் கொடுத்த கொடைகள், விருந்தோம்பல் பண்பு, குருவிற்கும், முன்னோர்களுக்கும் செய்த மரியாதை என அவர் வாழ்வில் பின்பற்றிய வாழ்க்கை நெறிமுறைகளை ஆராய்வதால் இவ்வாய்வில் வரலாற்று ஆய்வு அணுகு முறை பின்பற்றப்பட்டுள்ளது.

## அறம்

அறம் என்பது வாழ்க்கைநெறி, ஒழுக்கம், நீதி, விழுமியம், கொடை, நோன்பு போன்றவற்றைக் குறிக்கும் என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்களின் வாயிலாக அறிய முடியும். சுருங்கக்கூறின் தனிமனிதன் கடமைகளைச் செம்மையாகத் தவறாது ஒழுக்கத்துடன் செய்தலாகும். ஓர் இடத்தில் குழுவாக வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்கள் அனைவரும் தனிமனித ஒழுக்கத்துடன் இருப்பதால் காலப்போக்கில் அது வாழ்க்கை நெறியாக மாறியுள்ளது. மனதில் குற்றம் இல்லாது வாழ்தலே அறவழியில் நடப்பதாகும். அத்தகைய மாண்புகளைப் பெற்றவர்களைச் சான்றோர்கள் என்கின்றனர். சோழ நாட்டை ஆட்சி செய்த இராஜராஜன் இத்தகையப் பண்பினைப் பெற்றுள்ளான். தன் கடமைகளில் இருந்து தவறாது ஒழுக்கத்துடன், நேர்மையுடன் சமயப் பொறையுடன் ஆட்சி செய்தான்

## இராஜராஜனின் குண நலன்கள்

இவர் இரண்டாம் பராந்தகன் என்று அழைக்கப்பட்ட சுந்தர சோழனுக்கும, மலையமானின் மகளான வானவன் மாதேவிக்கும் மகனாகப் பிறந்தார். தமக்கை குந்தவையுடன் வளர்ந்தார். தந்தையின் உடல் நலம் சரியில்லாத காரணத்தினால் அவரது தாயாரும் தந்தை உடன் நேரத்தைச் செலவிட்டுள்ளார். இதன் காரணமாக தமக்கையிடம் தம்பியை வளர்க்கும் பொறுப்பு வந்தது. இராஜராஜனும் கல்வி, கேள்விகளில் சிறந்தவராக, சமய ஒழுக்கம் நிறைந்தவராக வளர்ந்து ஆட்சிப் பொறுப்பில் உள்ள ஏற்ற இறக்கங்களைக் குந்தவை மூலம் கற்றுக்

கொண்டார். இராஜமாதாவாக இருந்த செம்பியன் மாதேவி பாட்டியாக இருந்து பேரப்பிள்ளைகளைப் பொறுப்புடன் வளர்த்தார். சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாகத் திகழ வைத்த பெருமை தமக்கைக்கும், பாட்டி செம்பியன் மாதேவிக்கும் சென்று சேரும்.

இராஜராஜன் சிறந்த குணங்களான வீரம், காதல், கொடை, சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுத்தல், திறமை, மக்களிடம் காட்டிய அன்பு, அதிகாரிகளுடன் பழகிய நட்பு, குருவிடம்காட்டியமரியாதை, குடும்பத்தின் மீதான பாசம் நாட்டின் மீது வைத்தப் பற்று போன்ற பண்புகளை ஒருங்கே கொண்டவன்.

## இராஜராஜன் போரில் பின்பற்றிய அறம்

'வீரம்' என்ற உணர்வு தமிழர்களின் உதிரத்தில் கலந்தது. வீரத்தின் வெளிப்பாடு போர். இராஜராஜன் செய்த அனைத்துப் போர்களிலும் அறத்தைக் கடைப்பிடித்தான். போருக்கென்று தனியாக 'அறம்' பழந்தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது.

இராஜராஜன் அத்தகைய கோட்பாடுகளைப் பின்பற்றியுள்ளான். தஞ்சை பெரிய கோவிலைக் கட்டி முடிக்கும் முன்னர் மேலைச் சாளுக்கியத்துடன் போரிட இராஜராஜன் தயாரானான். மன்னன் தன் நாட்டைக் காக்க மற்ற நாடுகளுடன் போரிட வேண்டும். இப்பழக்கம் காலம் காலமாக தொடர்ந்து வருகிறது. தமது இருப்பைத் தக்க வைத்துக்கொள்வதற்குப் போர் அவசியமாகிறது. அதன் அடிப்படையில் போருக்குச் சென்றாலும் அங்கு நடக்க இருக்கும் உயிர்பலிக்கு மன்னனின் மனம் கலங்கிற்று. அதனை மனதிற்குள் அடக்கிக் கொண்டு களத்தில் வந்த வேலையைச் சிறப்பாகச் செய்தான். இதனை, சிவனே என் சிவனே என்னோடு இரும். உமக்காகச் செய்கின்ற இந்த வேள்வியில் எத்தனைப் பூக்களை நான் பொசுக்கப் போகிறேன். தெரியவில்லையே என்று உள்ளுக்குள்ளே அரற்றினார். வெளியே கல்லென இருந்தார். (உடையார் பா-5, ப-328) நாட்டிற்காக உயிர் விடும் மறவர்களை நினைத்து இராஜராஜன் வருந்தினான். என்பதில் இருந்து அவரின் மனிதநேயம் வெளிப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

போரின்போது கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளாகப் பகல் பொழுதில் மட்டும் போர் புரிய வேண்டும். அதற்கு முன்பாக எக்காளம் முழங்கவேண்டும். எதிரி நாட்டில் இருந்து அழைப்பு வந்தவுடன் போரைத் துவங்க வேண்டும் இவையெல்லாம் போர் செய்வதற்கு உண்டான அடிப்படை விதிகள். இதைச் சரியாக இராஜராஜன் பின்பற்றியுள்ளான். எக்காளம் முழங்கட்டும் என்று சொல்ல போருக்கான எக்காளம் முழங்கிற்று போர்ப் பறை அதிர்ந்தது. வீரர்கள் வேகமானார்கள். போர் எக்காளச் சத்தமும் போர்பறைச் சத்தமும் எதிர்பக்கம் உள்ளவர்களை வேகமடையச் செய்தன. அவர்களும் வரிசையானார்கள் வாள் உயர்த்தி வா போருக்கு என்று அழைத்தார்கள். (உடையார், பா - 5, ப - 340) என்று பாலகுமாரன் குறிப்பிட்டுள்ளார். இதனை,

> **வெம்போர்ச் செழியனும் வந்தனன்;**
> **எதிர்த்த வம்ப மள்ளரோ பலரே;**
> **எஞ்சுவர் கொல்லோ பகல்வதச் சிறிதே?**
> **(புறம், பா - 79)**

என்ற புறநானூற்றுப் பாடல் விவரிக்கிறது. இதன் மூலம் இராஜராஜன் போரில் ஈடுபடும் போதும் அறத்துடன் செயல்பட்டுள்ளார் என்பதை அறிய முடிகிறது. ஒரு நாட்டின் மீது படையெடுத்துச் செல்லும்போது அங்கு கவனத்தில் கொள்ள வேண்டியது, பெண்களையும், குழந்தைகளையும், வயோதிகர்களையும் விட்டு விடுங்கள் மற்ற வீரர்கள் எல்லோரையும் முடமாக்குங்கள். மேலைச் சாளுக்கியத்தில் ஒரு வாள், ஒரு வேல் இருக்கக் கூடாது. ஒரு பசு, ஒரு குதிரை இருக்கக்கூடாது. அத்தனையும் தஞ்சைக்குத் திரும்பியாக வேண்டும். வெற்றி அல்லது வீரமரணம். (உடையார், பா - 5, ப - 340)

என்று இராஜராஜன் கூறியதாகப் பால குமாரன் குறிப்பிட்டுள்ளார். இதனை,

**ஆவும், ஆன் இயற் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடையீரும், பேணித்
தென் புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன் போல் புதல்வாப் பெறா அதீரும்,
எம் அம்பு கடி விடுதும், நும் அரண்
சேர்மின் என (புறம், பா - 9)**

என்ற புறநானூற்றுப் பாடலில் பசு, பார்ப்பனர், பெண்கள், குழந்தை இல்லாதவர் அனைவரும் பாதுகாப்பான இடத்திற்குச் சென்று விடுமாறு பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி கூறியதாக நெட்டிமையார் பாடியுள்ளார்.

சங்க இலக்கியத்தில் கூறப்பட்ட கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு பெண்களையும், குழந்தைகளையும் வயதானவர்களையும் துன்புறுத்தாமல் விட்டதோடு எதிரி நாட்டில் ஒரு மூங்கில் கழிக் கூட விட்டு வைக்காமல் அனைத்தையும் தஞ்சைக்குக் கொண்டு வந்தான் என்பதை அறிய முடிகிறது. மேலும் எதிரி நாடு மீண்டும் பழைய நிலைக்கு வருவதற்கு பல ஆண்டு காலம் ஆகும் அளவிற்கு அங்கு எவ்வித கருவிகளும் இல்லாமல் கவனமாகப் பார்த்துக் கொண்டான் என்பதையும் அறிய முடிகிறது. இதன் காரணமாக இராஜராஜன் செய்த எல்லாப் போர்களிலும் வெற்றி அடைந்துள்ளான்.

போரில் தோற்றுப்போன மற்ற நாட்டுக் கைதிகளைக் கவர்ந்து கொண்டுவந்து அவர்களுக்கு உணவு, உடை, உறைவிடம் கொடுத்து வேலையும் கொடுத்துள்ளான். நூற்றுக்கணக்கான அடிமை வீரர்களைக் கொண்டு சோழ நாட்டில் வயல் வேலை, பாறைகள் உடைக்கும் வேலை, சிற்பிகளுக்கு உதவியாள், தஞ்சைப் பெரிய கோவில் கட்டுமானப் பணி, ஏரிகள் தோண்டும் பணி என்று பல வேலைகளைக் கொடுத்துள்ளான். திறமை உள்ளவர்களை அதிகாரிகளாக நியமித்தான். அதில் பல வீரர்கள் மனம் மாறி சோழ நாட்டில் வாழ துவங்கினர். அவ்வாறு இருக்க விரும்பாமல் தாய்நாட்டை நோக்கிச் சென்றவர்களைப் பத்திரமாக வழியனுப்பியும் வைத்துள்ளான் என்று பாலகுமாரன் குறிப்பிடுவதில் இருந்து இராஜராஜன், போருக்குப் பிறகும் அறத்துடன் நடந்துகொண்டான் என்பது அடிமை வீரர்களை நடத்திய விதம் சான்றாக அமைகிறது. இராஜராஜனும் வீரம் மிக்கவனாக இருந்தாலும் இரக்கத்துடன் இருந்தான் என்பதையும் மறத்திலும் அறம் கடைப்பிடிக்கப்பட்டதையும் அறிய முடிகிறது.

## குடும்பத்தின் மீது கடைபிடித்த அறம்

இராஜராஜன் சிறு வயதில் இருந்து பெரியோரை மதித்தல், அவர்களின் கூற்றைக் கவனித்தல், ஒழுக்கம், அமைதி, சுறுசுறுப்புப் போன்ற பண்புகளோடு வளர்ந்தான். அதற்கு மூலக் காரணம் அவனின் குடும்ப உறுப்பினர்கள். அனைத்துச் சூழ்நிலையிலும் மனிதன் அவனது கடமையைச் சரிவர செய்தல் மிகப்பெரிய அறமாகும். மற்றவரின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிப்பது அவர்களுக்கு மரியாதை தருவது போன்றவையும் அறமாகும்.

அவ்வகையில் நோக்கும்போது பெற்றோர், தமக்கை, பாட்டி, மனைவிகள், மகள்கள், மகன், பேரன் என்று குடும்பத்தில் உள்ள அனைத்து உறவுகளையும் இராஜராஜன் நேசித்தான். அவர்களுக்கு வேண்டியதை அளித்து மகிழ்வாகப் பார்த்துக்கொண்டான். குடும்பத்தின் மீது வைத்த பாசம் அவனைப் பண்பாளனாக மாற்றியுள்ளது.

அரசியல் சூழ்நிலைக்காகப் பல திருமணங்கள் செய்து கொண்டாலும் பஞ்சவன் மாதேவி மட்டும் காதல் மனைவியாக அவருடன் ஆயுள் முழுவதும் வாழ்ந்ததாக அறிய முடிகிறது. ஆதித்தக் கரிகாலன் மறைவிற்குப் பிறகு முறையாக வந்த அரசப் பதவியைச் சித்தப்பா உத்தமச் சோழனுக்கு விட்டுக் கொடுத்தான். இச்செயல் அவனுடைய

பெருந்தன்மையைக் காட்டுகிறது. இதற்குப் பாட்டி செம்பியன்மா தேவியின் வளர்ப்பும் ஒரு காரணமாகும். கண்டராதித்தன் மறைவிற்குப் பிறகு குழந்தையாக இருந்த உத்தமச் சோழனை அரியணையில் அமர வைத்திருக்க முடியும். ஆனால் செம்பியன்மாதேவி அதைச் செய்யவில்லை மாறாகச் சுந்தரச் சோழனை அரசனாக்கினார். பாட்டிக்குப் பட்ட நன்றிக் கடனாகவும் இருக்கும் என்பது ஆய்வாளரின் கருத்து. மற்றொரு காரணம் பதவி என்பதும் ஒரு வகை சொத்துதான். சித்தப்பாவிற்குக் கிடைக்கும் நியாயமான பதவியைத் தட்டி பறிக்கக் கூடாது என்ற மனத் தெளிவும் இருந்ததால் இராஜராஜன் அறத்துடன் செயல்பட்டுள்ளது புலனாகின்றது.

உத்தமச் சோழனின் ஆட்சியில் சோழ நாடு பல சிக்கல்களைச் சந்தித்து இருந்ததைப் பார்த்தும் சகிப்புத் தன்மையுடன் வாழ்ந்தான் தனக்கான நேரம் வரும்வரை காத்திருந்து ஆட்சியில் அமர்ந்தான்.

எல்லா இடத்திலும் அந்தண வீரர்களும் அந்தண ஒற்றர்களும், அந்தண மந்திரிகளுமே இருப்பதைப் பார்த்து நானும் புழுங்கினேன். மீற முடியவில்லை. நான் எந்த மரியாதையையும் இழக்காததால் தொடர்ந்து அரசனாக இருந்தேன். ஆனால் அந்த அரசாட்சி இப்போது அலுத்து விட்டது. இப்படியொரு அரசனாக இருப்பதற்கு பதிலாய் எங்கேனும் யாத்திரை போகலாம் என்று தான் நான் எண்ணியிருந்தேன். நீயே வந்து விட்டாய் இது உன் அரசவை இது உன் ஆட்சிப் பீடம். நீயே மன்னனாக இரு. நீயே சோழ தேசத்தை வளமான பலமான நாடாக மாற்று. அவர்களை நீ என்ன செய்தாலும் எனக்கு அக்கறையில்லை. (உடையார், பா - 3, ப - 501) என்று உத்தமச் சோழன் இராஜராஜனிடம் கூறுவதாகப் பாலகுமாரன் கூறியுள்ளார். இதன்மூலம் சித்தப்பாவின் ஆட்சியில் ஏற்பட்ட குளறுபடிகளைக் களைந்து சோழ நாட்டை விரிவுப்படுத்திப் பலமான நாடாக மாற்றுவதற்குக் கடினமான உழைப்பை இராஜராஜன் கொடுத்துள்ளான் என்பதை அறியமுடிகின்றது. சித்தப்பாவின்மகனானத் தம்பியையும் அவருடைய பொறுப்பில் பத்திரமாகப் பார்த்துக் கொண்டான். தனக்குத் தீங்கு இழைத்தவர்களுக்கும் நல்லது செய்கின்ற குணமுடையவனாக இராஜராஜன் வாழ்ந்தான் என்பது ஆய்வாளரின் எண்ணமாகும்.

சோழ நாட்டிற்கு அயராது தொல்லை கொடுத்து வந்த கீழைச் சாளுக்கியத்தை வென்று அந்நாட்டிற்குத் தன் மகளை மருமகளாக அனுப்பி வைத்து சோழ நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தினான். சுற்றியிருக்கும் அண்டை நாடுகளுடன் நட்புறவு பாராட்டினான். மகன் இராஜேந்திரனுக்கு மாதாண்ட நாயகன் என்று பட்டம் கொடுத்து மற்ற நாடுகளை எல்லாம் சோழ நாட்டுடன் இணைக்கும் பணியில் தீவிரமாகச் செயல்பட வைத்தான். சரியான நேரம் வரும் வரை காத்திருந்து மகனுக்கு இளவரசன் என்ற பட்டம் சூட்டிப் பின் அரசனாகவும் அரியணை ஏற்றினான். தன் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் செம்மையாக நிறைவேற்றினான். அதன் மூலம் குடும்ப அறத்தை பேணிக் காத்தவனாகக் கருதப்படுகிறான்.

### மக்களிடம் காட்டிய அறம்

மன்னன் என்பவன் மக்களிடம் அன்பாக இருந்து இனிமையாகப் பழகி, கடுஞ் சொற்களைத் தவிர்த்து நாட்டு மக்களுக்கு நல்லதை மட்டும் செய்பவனாக இருக்க வேண்டும். இதனை, இராஜராஜன் சோழ நாட்டு மக்களின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தான்; ஏரிகள், குளங்கள், கால் வாய்களை அமைத்து நீர்ப் பற்றாக் குறையைப் போக்கினான்; நிலங்களை அளந்து தரிசு நிலம், விளை நிலம் என

இரண்டு ஆண்டுகளில் வேலையை முடித்து விளை நிலத்திற்கு மட்டும் வரி விதித்தான். கிராமசபை ஒன்றை ஏற்படுத்தி மக்களின் குறையைப் போக்கினான். தாத்தாவின் காலத்தில் உருவான குடவோலை முறை திட்டத்தைச் சரியான முறையில் பயன் படுத்தினான்; சாவா மூவாப் பேராடு திட்டத்தின் வளர்ச்சியை அதிகப்படுத்தினான்; சாதாரண மக்களிடம் எளிமையாக, இனிமையாகப் பழகினான்; கோவிலுக்காக வந்த மாட்டு வண்டி காவிரி ஆற்றில் கவிழ்ந்ததை அறிந்து துரிதமாக அவ்விடத் திற்குச் சென்று பாதுகாப்புப் பணிகளைப் பலப்படுத்தினான். பத்திரமாக மீட்கப்பட்ட வரைபடங்களைப் பழமர்நேரி சிவன் கோயில் கருவறையில் வைத்து அந்த நேரத்திலும் மக்களிடம் உரையாடினான். இந்த அகால நேரத்தில் உங்களையெல்லாம் தூக்கத்திலிருந்து எழுப்பி இங்கே வர வழைத்ததற்காக முதலில் மன்னிப்புக் கோருகிறேன். (உடையார், பா-1, ப-74) என்று பணிவாகப் பேச்சைத் துவங்கினான். அவர் கட்டப்போகும் கோவிலைப் பற்றி நாம் வாழும் காலத்தில் நாம் எவ்வளவு சீரும் சிறப்புமாக வாழ்ந்தோம் என்று நம்முடைய சந்ததிகளுக்குத் தெரிய வேண்டுமென்று ஒரு ஆசை. நம்மை இறைவன் எவ்வளவு அழகாகப் பாதுகாத்தார். எத்தனைக் கருணையோடு நம்மீது அக்கறைக் காட்டினார் என்பதை நம் சந்ததிகள் தெளிவாய்த் தெரிந்து கொள்ள வேண்டுமென்பது என் விருப்பம். (உடையார், பா-1, ப-75) என்று இராஜராஜன் கூறுவதாகப் பாலகுமாரன் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் மக்களுடன் நட்பாகப் பழகி அவர்களின் மனங்களை அன்பால் நிறைத்தவன் என்பதை உணர இயலுகிறது. மக்களிடம் மட்டும் அல்லாது அதிகாரிகளுடனும் நட்பாகப் பழகினான். தவறு எங்கு நடந்தாலும் தட்டிக் கேட்டு அதை சரிப்படுத்தியவன். பிரம்மராயரைப் பற்றி மக்கள் ஒரு முறை குறை சொல்ல உடனே மன்னர் எழுந்து பிரம்மராயருக்குப் பதிலாக நான் மன்னிப்பு கேட்கிறேன் என்று கரம் கூப்பினார். மக்கள் வட்டம் பதறிவிட்டது. பிரம்மராயர் தவித்துப் போனார். அதே கூட்டத்தில் கூட்டம் முடிகிற போது முடிந்தவரை என் அதிகாரிகளை உங்களிடம் பணிவாகவும், பிரியமாகவும் வெகு நிச்சயம் பேசச் சொல்கிறேன். உங்களிடம் பேசுவதல்லால் வேறு எந்தப் பணியும் அவர்களுக்கு முக்கியமில்லை. உங்களுக்குத் தரக்கூடாத தகவல்கள் ஏதும் அரண்மனையில் நடைபெறுவதில்லை. (உடையார், பா-1, ப-178) என்று மக்களிடம் இராஜராஜன் கூறியதாக ஆசிரியர் கூறியுள்ளார். இதிலிருந்து அதிகாரிகளைக் கண்டித்து அவர்களின் தவறுக்கு மன்னனே பொறுப்பு ஏற்றுக்கொண்டு மன்னிப்பு கேட்பது மன்னனின் பேருள்ளத்தைக் காட்டுகிறது. மக்களின் மனம் புண்படக் கூடாது என்பதையும், மக்கள் நன்றாக இருக்க வேண்டும் என்பதையும் மனதில் கொண்டு சிறந்த ஆட்சியை வழங்கி உள்ளான்.

**வான் நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்**
**கோல் நோக்கி வாழும் குடி**

**(குறள், 542)**

என்ற குறளுக்குக்கேற்ப இராஜராஜனின் மனம் செம்மைப்பட்டதாக இருந்ததை அறிய முடிகிறது. அவனது ஆட்சியும் சிறப்பாக நடந்து குடிமக்களும் அமைதியாக, மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

## கொடையினால் விளைந்த அறம்

உயிரின் துன்பத்தைக் கண்டு வருந்தியவனின் மனதில் இரக்கம் பிறக்கும். அந்த உயிரின் மீது கருணையும் கொள்வான். கருணையினால் பிறந்தது ஈகைப் பண்பு. தன்னிடம் உள்ளவற்றை இல்லாதவனிடம் கொடுப்பது கொடையாகும். ஆக இரக்கம், கருணை, கொடை இவை அனைத்தும் ஈதலின் உட்பொருளாகும். இத்தகைய பண்பினை இராஜராஜன் பெற்றுள்ளான்.

**நின்றயுடையமை நீர்மை யுடைமை**
**கொடையே**
**பொறையுடைமை பொய்மை புலாற்கண்**
**மறையுடைமை**
**வேயன்ன தோளா யிவையுடையான்**
**பல்லுயிர்க்கும்**
**தாயன்ன னென்னத் தகும்**

**(ஏலாதி, பா - 5)**

என்ற பாடல் வரிகளின்படி பல்லுயிர்களுக்கும் நன்மை செய்துள்ளான். சோழநாட்டில் இருந்த பழைய கோவில்களைப் புதுப்பிக்கும் பணிகளுக்குப் பல கொடைகளை வழங்கினான். சோழர்களின் நாகரிகத்தைப் பறை சாற்றும் விதமாக, கலைகளின் கூடாரமாகத் திகழும் இராஜ ராஜேஸ்வரம் என்ற தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டுவித்தான். அக்கோயிலுக்குத் தேவையான பொன் ஆபரணங்கள், உலோகச் சிலைகள், பண்ட பாத்திரங்கள், கொடுத்து அக்கோவிலில் வேலைச் செய்யும் ஊழியர்களுக்கு வருடத்திற்குத் தேவையான ஊதியம் முழுவதும் அக்கோவில் மூலம் பெறச் செய்தான். கோவில் என்பது சமூகக்கூடம் என்பதை மக்களின் மனதில் பதிய வைத்தான்.

ஆயிரம் வருடத்திற்கு மேலாகத் தமிழர்களின் வாழ்வியலைக் கூறும் தஞ்சைப் பெரிய கோவில் தான் இராஜராஜன் செய்த அறங்களில் தலைசிறந்தது. மற்றொன்று தேவாரத் திருவாசகங்களை மீட்டது. சைவச் சமயத்தைத் தழைத்தோங்க செய்த அதே நேரத்தில் மற்ற மதங்களுக்கும் மதிப்பு அளித்தான் அவன் நாட்டுக்குள் பல பிரிவுகள் இருந்தாலும் அவர்களைச் சோழ மக்கள் என்று குறியீட்டில் பழகினான் இதை, இங்கு ஜாதிப் பிரிவினைகள் இருக்கின்றன. ஆனால் ஒருவருக்கொருவர் எந்த உரசலும் இல்லை. அவனும் சைவன், நானும் சைவன் வைணவர்களைப் போற்றுவோம் காணாபத்தியர்களைப் போற்றுவோம். குமரக் கடவுளைப் போற்றுவோம். சாக்த உபாசகத்தைப் போற்றுவோம். (உடையார், பா-3, ப-269) என்று இராஜராஜன் மகனிடம் கூறுவதாகப் பாலகுமாரன் குறிப்பிட்டுள்ளார். இதனை, தன்னளவில் சிவநெறிச் செல்வராகச் சிவபாத சேகரன் என்ற பெயரோடு விளங்கினாலும் வைணவம். சமணம், இஸ்லாம் என்று எல்லா சமயங்களுக்குமே உரிய மதிப்பளித்துப் போற்றியிருக்கிறான் இராஜராஜன். இராஜ ராஜனின் சமய நல்லிணக்கத்தை அறிந்து கொள்வதற்கு அவர் நேரடியாகக் கொடுத்த கொடைகளையும் அவருடைய தமக்கையும் அலுவலர்களும் கொடுத்த கொடைகளையும் நாம் நோக்க வேண்டும். இராஜராஜன் பல வைணவக் கோயில்களையும் கட்டுவித்துள்ளார். (சோழர்கள் இன்று, ப - 234) என்று சமயம் குறித்து சுடலைமுத்து பழனியப்பன் விவரிக்கிறார். இராஜராஜனின் ஆட்சியில் மக்கள் அவர்கள் விரும்பிய சமயத்தைப் பின்பற்ற முடியும் என்ற தளர்வான கொள்கை பரவியிருந்ததை அறிய முடிகிறது.

தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டி முடித்து விட்டு அதற்குக் கொடை கொடுத்தவர்களின் பெயர்களையும் கல்வெட்டில் சேர்க்கச் சொன்ன பெருந்தகையாளன் இராஜராஜன். இதை, இந்த ஆடுகளையும், விளக்கையும் பெற்றுக் கொண்டு இந்த மறவருடைய பெயரும் இந்த கல்லிலே வரும்படி செய்ய வேண்டும். யார் யார் என்னென்ன கொடுக்கிறார்களோ அத்தனை பேர்களுடைய பெயரும் இங்கே வரவேண்டும். ஒருவர் மீதமில்லாது ஒருவரையும் புறக்கணிக்காமல் எவராக இருப்பினும், அவர் அளித்த கொடை எவ்வளவு சிறிதாக இருப்பினும் அது இந்தக் கல்லிலே பொறிக்கப்பட வேண்டும். (உடையார், பா - 6, ப - 499) என்று இராஜராஜன் கூறுவதாகப் பாலகுமாரன் குறிப்பிட்டுள்ளார். இதனை, யார் என்ன கொடுத்தாலும் அதைக் கோயிலின் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட வேண்டும் என்கிறார் இராஜராஜன். இதில் இரண்டு விஷயங்கள் ஒன்று எல்லோரையும் சமமாக

*நடத்துவது அரசர் குலத்தவர் கொடுப்பதை மட்டும் கல்வெட்டில் பொறித்துவிட்டு, சாதாரண மக்கள் கொடுப்பதை உதாசீனம் செய்ய வேண்டும் என்று அவர் நினைக்கவில்லை. மேலும் கொடுக்கும் பொருளின் அளவுகளைப் பார்க்கத் தேவையில்லை. கொடுப்பவர்கள் எவ்வளவு கொடுக்கிறார்களோ அவற்றையெல்லாம் கல்லிலே வெட்ட வேண்டும் என்று கூறுவது அவருடைய பெருந்தன்மையை வெளிப் படுத்துவதாகவே உள்ளது. (இராஜராஜ சோழன் ப - 84) என்று ச. ந. கண்ணன் குறிப்பிட்டுள்ளார். இராஜராஜன் மக்களிடம் ஏற்றுத்தாழ்வுகளைக்காணவில்லை. மாறாக அவர்களின் மனங்களை அறிந்தவன் என்பதை அவனின் செயல்கள் மூலம் அறிய முடிகிறது. மேலும் சாதாரண மக்களையும் வரலாற்றில் இடம் பெற செய்துள்ளான். இக்குறிப்புகளை நோக்கும்பொழுது அவனின் உயர்வான பண்பு வெளிப்படுகிறது என்பதையும் உணர இயலுகிறது.*

*சோழ நாடு மட்டுமல்லாது போரிட்டு வென்ற நாடுகளில் எல்லாம் கோயில்களை நிர்மாணித்தும், சேதமடைந்த கோயில்களுக்குக் கொடைகள் கொடுத்தும் உள்ளான். சோழ நாட்டில் உள்ள பல ஊர்களை அந்தணர்களுக்குப் பிரம்மதேயமாக மாற்றி அவர்களுக்குக் கொடையாகக் கொடுத்தான். இளவரசனாக இருந்தபொழுது சிதம்பரத்தின் அறையில் ஒரு மூலையில் கிடைத்த தேவாரத் திருவாசங்களைத் தில்லையில் இருந்து மீட்டான். இளவரசர் இரண்டு கைகளாலும் நீ அழுத்தி அழுத்தி மிக மெதுவாக மிக மிருதுவாக கதவு திறந்தார். உள்ளுக்குள் குனிந்து எல்லோரும் எட்டிப்பார்த்தார்கள். புகையாய் தூசு மண்டியிருந்தது. உள்ளே மலைபோல ஒரு கரையான் புற்று இருந்தது. எண்ணெய் விட வேண்டும். நிறைய தைலம் விட வேண்டும். தைலம் விட்டு புற்றை மெல்ல கரைக்க வேண்டும். (உடையார், பா - 3, ப - 497,498) என்று நம்பியாண்டர் நம்பி இளவரசன் அருண்மொழிவர்மனிடம் கூறுவதாகப் பாலகுமாரன் குறிப்பிட்டுள்ளார். இராஜராஜன் சைவத் திருமுறைகளை மீட்டார். இவ்வளவு கடின முயற்சிக்குப் பின்னர்தான் தொலைந்துபோன சைவத் திருமுறைகளில் 1% திருமுறைகள் கிடைத்து உள்ளன.*

*அப்பர் பாடிய 49,000 பதிகங்களில் 313 பதிகங்களும், சம்பந்தர் பாடிய 16000 பதிகங்களில் 383 பதிகங்களும், சுந்தரர் பாடிய 37000 பதிகங்களில் 100 பதிகங்களும் என மொத்தம் 96000 தேவாரப் பதிகங்களில் 796 பதிகங்கள் மட்டும் மீட்கப்பட்டன. இவை ஒட்டுமொத்த தேவாரத்தில் 1% க்கும் குறைவானவை என்றாலும் இராஜராஜன் மட்டும் இந்த முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்றால் இன்று தேவாரத்தில் மொத்தமாகவே 10 பாடல்கள் கூட மிஞ்சியிருக்காது என்பது உண்மை. இப்படியாகத் தன்னால் மீட்கப்பட்ட பாடல்களைத்தான் இராஜராஜன் தஞ்சைப் பெரிய கோவிலில் பாட வைத்தார். (இராஜராஜ சோழன், ப - 112) என்று மன்னர் மன்னன் கூறியுள்ளார்.*

*இதன் மூலம் தேவாரப் பாடல்களைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி என்பது தெளிவாகிறது, மூவர் இயற்றிய பதிகங்களை மறைவில் இருந்து வெளிச் சத்திற்குக் கொண்டு வந்த பெருமை மாமன்னனான இராஜராஜனைச் சேரும் என்பதை நன்கு உணர முடிகிறது. அவன் காப்பாற்றிய தமிழ் மொழியும், சைவ சமயமும் அவனைப் புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றன என்பதை அறிய முடிகிறது.*

### விருந்தோம்பல் பண்பு

***அறச் செயல்களில் தலையாயது விருந்தோம்பல் இப்பண்பு பழந்தமிழர்கள் முதல் தற்கால மனிதர்கள் வரை பின்பற்றப்பட்டு வருகிறது.***

***விருந்தே தானும்***
***புதுவது புனைந்த யாப்பின் மேற்றே***
***(தொல் - 231)***

என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். மேலும் திருக்குறள், சங்க இலக்கியங்கள் முதலான பல்வேறு நூல்களில் விருந்தோம்பல் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

அரண்மனைக்கு வரும் அன்பர்களை வெறும் கையோடு அனுப்பாமல் அவர்களுக்கு உணவு, உடை கொடுத்துத் தேவைப்பட்டால் பொன்னையும் கொடுத்து வழியனுப்பினான் என்று உடையார் புதினம் குறிப்பிடுகிறது. மன்னன் என்ற கர்வம் சிறிதும் இல்லாமல் தன் படைத்தளபதிகளுடனும் அரசாங்க அதிகாரிகளுடனும் நட்புடன் பழகினான். அரண்மனையில் நடக்கும் முக்கியமான ஆலோசனை கூட்டங்கள் முடிந்த பின்பு வந்தவர்களுடன் தானும் அமர்ந்து உணவு அருந்தியுள்ளான். சக்கரவர்த்திக் கருகே சமமாய் இராஜேந்திரருக்கு ஆசனம் போடப்பட்டது. அதற்கருகே பழுவேட்டரையரும் சக்கரவர்த்தியின் இன்னொரு பக்கம் பிரம்மராயரும், பிரம்மராயருக்கு பக்கத்தில் மூவேந்த வேளாளரும் இருக்க, அருண் மொழி கடைசி எல்லையில் அமர்ந்து கொண்டான். அருண்மொழிக்கு நேர் எதிரே நித்த விநோதப் பெருந்தச்சனும் இருந்தான். குஞ்சரமல்லர் அருண் மொழியின் எதிர்பக்கம் நாலு ஆசனங்கள் தள்ளி அரசருக்கெதிரே அமர்ந்திருந்தார். (உடையார், பா-3, ப-180 - 181) என்று பாலகுமாரன் கூறுவதில் இருந்து இராஜராஜனின் தலைமை பண்பு வெளிப்படுகிறது.

### குருவிற்குக் கொடுத்த மரியாதை

இராஜராஜனின் குருவாக இருந்தவர் கருவூரார் என்ற சித்தர். இவரை ஊரின் பெயரால் அவ்வாறு அழைக்கின்றனர். இராஜராஜனின் இளமைப் பருவம் முதல் வழிநடத்திய பெரும் சித்தர் அவர். சோழ நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து சோழ நாட்டின் எதிரிகளை அவ்வப்போது இராஜராஜனுக்குத் தெரிவிப்பார். பெரிய கோவில் கட்டி முடிக்கப்பட்டு கருவறையில் லிங்கப் பிரதிட்டைச் செய்யும் பொழுது முழு உதவியும் செய்து பிரகதீஸ்வரரைச் சரியாக அவ்விடத்தில் பொருத்தியவர். குந்தவைக்கும் அருண்மொழிக்கும் கருவூர் சித்தர் பாதுகாப்பாக இருந்தார். தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டுவதற்கு அடித்தளம் இட்டவர் கரூர் தேவர். இதனை, அருண் மொழி. கோயில் கட்டுகிறேன் என்று சொல்லி விட்டு தினந்தோறும் நீ நினைவுபடுத்திக் கொள்ள வேண்டுமென்பதற்காக மூன்று காரியங்கள் செய்ய வேண்டும். தினமும் திருநீறு பூச வேண்டும் தினமும் ஏதாவது ஒரு சிவனடியாருக்கு உணவு கொடுக்க வேண்டும். மண்ணிலோ, கல்லிலோ சிவலிங்கம் பார்த்தால் கண்மூடி நின்று ஒரு முறையேனும் நீண்டு நெடுஞ்சாண்கிடையாக விழுந்து நமஸ்கரிக்க வேண்டும். இந்த மூன்று விஷயங்களைச் செய்கிற போதெல்லாம் ஐயனே உனக்காக மிகப்பெரிய கோவில் ஒன்று கட்டுவேன் என்று சங்கல்பத்தை நீ சொல்லிக் கொள்ள வேண்டும். என்று (உடையார், பா - 1, ப - 400) கருவூர் சித்தர் கூறியதாகப் பாலகுமாரன் குறிப்பிட்டுள்ளார்.

கருவூர் தேவர் இராஜராஜனைப் பற்றிப் பதிகம் ஒன்றைப் பாடியுள்ளார். அது சைவத் திருமுறைகளுள் ஒன்றாகிய ஒன்பதாம் திருமுறையில் சேர்த்துத் தொகுக்கப்பட்டுள்ளது. தூய துறவியரைப் பேணுவதும் ஒரு வித அறமாகும் அத்தகைய அறத்தைக் கருவூர் தேவரிடம் இராஜராஜன் பின்பற்றினான்.

### முன்னோர்களுக்குச் செலுத்திய மரியாதை

தமிழர்களின் வாழ்க்கை முறையில் இறந்து போன முன்னோர்களைத் தெய்வமாக வழிபடுவது இன்றியமையாத சடங்காக இருந்து வருகிறது. போரில் இறக்கும் போர் வீரனுக்கு 'நடுகல்' வைத்து வழிபடும் பழக்கம் இருந்தது. அதனைச் சுற்றி மண்டபம் எழுப்பினால் அது பள்ளிப்படை எனவும் அழைக்கப்படுகிறது. முன்னோர் வழிபாடுக் குறித்து திருக்குறளிலும், பிற இலக்கியங்களிலும்

கூறப்பட்டுள்ளன. அத்தகைய செயலை 'நீத்தார் கடன்' எனவும் அழைப்பர்.

**குய்குரன் மலிந்த கொழுந்துவையடிசில்**
**இரவலர்த் தடுத்த வாயுற் புரவலர்**
**கண்ணீர்த் தடுத்த தண்ணறும் பந்தர்க்**
**கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி**
**அல்லி யுணவின் மனைவியோ டினியே**
**புல்லென்றனையால் வளங்கெழு திருநகர்**
**வான்சோறு கொண்டு தீம்பால் வேண்டும்**
**முனித்தலைப் புதல்வர் தந்தை**
**தனித்தலைப் பெருங்காடு முன்னிய**
**பின்னே (புறம், பா - 250)**

என்று புறநானூற்றுப் பாடலில் தாயங் கண்ணியார் நீத்தார் கடன் செய்வதைப் பற்றிக் கூறியுள்ளார். சோழ மரபில் வந்த இராஜராஜனின் தாத்தாவான அரிஞ்சயன் என்ற சோழ அரசனுக்கு இராஜராஜன் நீத்தார் கடன் செய்துள்ளார்.

தன் பாட்டனாகிய அரிஞ்சயனையும் பெரிய பாட்டியாகிய செம்பியன் மாதேவியையும் நினைவு கூர்தற்கு அறிகுறியாக முறையே வட ஆர்க்காடு ஜில்லாவில் மேற்பாடி என்னும் ஊரில் அரிஞ்சயேச்சுரம் என்ற கோயிலும் திருமுக்கூடலில் செம்பியன் மாதேவிப் பெருமண்டபம் என்ற மண்டபமும் கட்டு வித்திருப்பது இவன் தன் முன்னோர்களிடத்தில் எத்துணை அன்பும் மரியாதையும் வைத்திருந்தான் என்பதை இனிது புலப்படுத்தி நிற்கும். (பிற்காலச் சோழர் சரித்திரம், ப - 120) என்று தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் கூறியுள்ளார். இராஜராஜன் அரிஞ்சயனை நேரில் பார்த்ததில்லை என்றாலும் அவரின் வீரச்செயல்களைக் கேட்டு வளர்ந்ததின் காரணமாக அவருக்குக் கோயில் ஒன்றைக் கட்டினான். அவ்வாறே பாட்டியின் நினைவாகவும் மணிமண்டபம் எழுப்பினான். இரத்த உறவுகளுக்கு மட்டும் வேதனை படாமல், தன் நாட்டு ஒற்றனாகிய வைண வதாசன் இறந்ததற்கும் வருந்தினான். போரில் இறந்த வைணவதாசனது அஸ்திகலசத்தைப் பட்டத்து. யானையின் மீது வைத்து அதில் அமர்ந்திருந்த வீரன் ஈட்டியைத் தலை கீழாகப் பிடித்து வந்தான். அவ்வாறு பிடித்தால் இறந்தவர் தளபதி என்று பொருள். அவரை அந்தண தேவன் என்று மக்கள் அழைத்தனர். அதைப் போன்று மற்றொரு வீரன் “நக்கன்” சத்திரன் என்பவன். இருவரின் குடும்பத்தாருக்குச் சேர வேண்டிய இழப்பீடும் உடனடியாகக் கொடுக்கப்பட்டன. இன்றைக்கும் பெரும்பாலான வீடுகளில் முன்னோர் வழிபாடு இருக்கின்றது. இறந்த போர் வீரர்களுக்கான சன்மானம், மரியாதை ஆகியவற்றை அரசு வழங்குகிறது.

### இராஜராஜனும் மற்ற அரசர்களும் ஓர் ஒப்பீடு

1. இராஜராஜன் அவனின் தந்தை சுந்தர சோழனின் நிர்வாகத்தை விட சிறப்பாக ஆட்சி புரிந்து சோழ நாட்டின் எல்லைகளை விரிவுப்படுத்தினான்.
2. அண்ணன் ஆதித்த கரிகாலனைப் போன்று மிகுந்த சினம் கொண்டவனாக இல்லாமல் போர் வெறியுடன் இல்லாமல் நிதானமாக, பொறுமையுடன் ஆட்சியை நடத்தினான்.
3. கி.பி. 335 முதல் கி.பி. 375 முடிய ஆட்சி செய்த சமுத்திர குப்தருடன் இராஜராஜனை ஒப்பீடு செய்யலாம். கி.பி. நான்காம் நூற்றாண்டில் அவர் வட இந்தியாவை முழுவதும் ஆட்சி செய்தவர். போர் நுணுக்கங்கள் கலைத்திறன், சிறந்த நிர்வாக திறன் போன்றவற்றில் சிறந்து விளங்கியவர். அவரின் ஆட்சிக் காலத்தை மக்கள் பொற்காலம் என அழைத்தனர். அவரின் தமிழகம் மீதான தாக்குதலைப் பல்லவ மன்னன் முதலாம் விட்ணுகோபன் தடுத்து நிறுத்தினார். அவர் வடபகுதி முழுவதையும் ஆட்சி செய்தது போன்று வடபகுதி, தென்பகுதி மட்டுமல்லாமல் கடல் கடந்தும் சென்று அங்கு உள்ள இடங்களிலும் சோழக் கொடியை நாட்டினான் இராஜராஜன்.

4. இராஜராஜனுக்குப் பின்பு வந்த இந்திய ஆட்சியாளர்களில் அக்பர் குறிப்பிடத்தக்கவர். இவருடைய ஆட்சிக் காலத்தில் மக்களின் ஒற்றுமைக்காகப் பல்வேறு திட்டங்கள் தீட்டினார். மற்ற மதங்களை மதித்தார். கலைகளை ஊக்குவித்தார். இராஜராஜனைப் போன்று மக்களின் மனம் கவர்ந்தவராக வாழ்ந்தார்.
5. உத்தமச் சோழனைப் போன்று பெயரளவில் மன்னராக இருந்து தீயவரின் பிடிக்குள் சிக்காமல் நல்லவர்களின் நட்போடு நானிலம் சிறக்க ஆட்சி புரிந்தான் இராஜராஜன்.

## முடிவுரை

உயிர் வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகளில் ஒன்று நீர் அது மும்மாதம் பொழிந்து காவிரி ஆற்றில் நுரை பொங்க ஓடுகிறது. குடகு மலையில் உற்பத்தி ஆனாலும் சோழ தேசத்தைச் செழிப்பாக்க விரைந்தோடி வருகிறது காவிரி ஆறு. பிற்காலச் சோழர் மரபில் வந்த இராஜராஜன் நீர் மேலாண்மையைச் சிறப்பாகக் கையாண்டான். நூற்றுக்கணக்கான ஏரிகளை உருவாக்கினான். மக்களின் வாழ்விற்கு ஏற்ற நலத்திட்டங்கள் பலவற்றை உருவாக்கினான். முன்னினும் இல்லாத அளவிற்கு நாட்டு எல்லைகளை விரிவுப்படுத்தினான். வணிகர்களுக்கு இடையூறு செய்த கடல் கொள்ளையர்களை விரட்டியடித்து சோழ நாட்டின் பெருமையைக் கடல் கடந்து சென்றும் நிலைநாட்டினான். அண்டை நாடுகளுடன் நட்புறவு கொண்டான். போரில் தோல்வி அடைந்த வேறு நாட்டு மறவர்களைச் சோழ நாட்டிற்கு அழைத்து வந்து பல வேலைகளைக் கொடுத்து அவர்களின் வாழ்வை மாற்றினான். நாயன்மார்களின் கதையைக் கேட்டு வளர்ந்ததினால் சிறு வயதில் இருந்து உயர்வான அறச் சிந்தனைகளுடன் வளர்ந்தான். அவனுடைய வாழ்வில் அறத்தைக் கடைப்பிடித்து பல்வேறு குணநலன்களைப் பெற்றான். குடும்ப உறுப்பினர்கள் மீது அளவற்ற பாசம் வைத்து, நாட்டு மக்களிடமும் அதே அளவு அன்பை வைத்தான். விருந்தோம்பல் என்னும் பண்பில் தலைசிறந்து விளங்கினான் அருள்வழியில் ஆண்டவனை உணர்த்துவதும் 'அறம்' என நிருபித்து உள்ளான். குருவிடம் சீடனுக்குரிய பணிவுடன் வாழ்ந்தான். வந்த வழியை என்றும் மறக்கக் கூடாது. அதற்கு ஏற்ப இறந்தவர்களை நினைத்து அவர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளில் இருந்து தவறாது நன்றியைத் தெரிவித்தான்.

## சான்றெண் விளக்கம்

1. இடைக்குன்றூர் கிழார், புறநானூறு, பா - 79
2. கதிரைவேற் பிள்ளை. நா, தமிழ் மொழி அகராதி, ப- 154
3. கணிமேதாவியார் யார், ஏலாதி, பா - 3
4. கணிமேதாவியார், ஏலாதி, பா - 5
5. கண்ணன் ச.ந, இராஜராஜ சோழன், ப - 84
6. சதாசிவ பண்டாரத்தார் தி. வை, பிற்காலச் சோழர் சரித்திரம், ப - 120
7. சுடலைமுத்துப் பழனியப்பன், சோழர்கள் இன்று, ப.234
8. திருவள்ளுவர், குறள் - 542
9. திருவள்ளுவர், குறள் - 83
10. தாயங்கண்ணியார், புறநானூறு, பா - 250
11. தொல்காப்பியர், செய்யுளியல், நூற்பா - 231
12. நெட்டிமையார், புறநானூறு, பா - 9
13. மன்னர் மன்னன். இரா, இராஜராஜ சோழன், ப. 112

## பார்வை நூல்கள்

1. இளம்பூரணனார். தொல்காப்பிய பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 2005.
2. கண்ணன் ச.ந, இராஜராஜ சோழன், கிழக்குப் பதிப்பகம், முதல் பதிப்பு 2010.
3. கதிரைவேற் பிள்ளை. நா,தமிழ் மொழி அகராதி, சாரதா பதிப்பகம் சென்னை, முதல் பதிப்பு, 2003

4. கணிமேதாவியார், ஏலாதி, சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், முதல் பதிப்பு - 939
5. சதாசிவ பண்டாரத்தார் தி.வை, பிற்காலச் சோழர் சரித்திரம், இரண்டாம் பதிப்பு. 2022.
6. சமஸ். சோழர்கள் இன்று, தினமலர், முதல் பதிப்பு, 2003.
7. துரைசாமிப்பிள்ளை. சு., புறநானூறு மூலமும் உரையும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1951.
8. பாலகுமாரன். உடையார் பாகம் - 1, விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு, 2002.
9. பாலகுமாரன். உடையார் பாகம் - 3, விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு, 2004.
10. பாலகுமாரன். உடையார் பாகம் - 5, விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு, 2005.
11. பாலகுமாரன். உடையார் பாகம் - 6, விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு, 2006.
12. மன்னர் மன்னன். இரா, இராஜராஜ சோழன், பயிற்று பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 2021.
13. வரதராஜன். ஜி., திருக்குறள் உரை விளக்கம், பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு, முதல் பதிப்பு, 1954.